**செய்தி வெளியீடு எண் : 1811** **நாள் : 14.10.2022**

**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் கோ–ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனை – 2022 தொடங்கி வைத்து, புதிய ரகங்களை அறிமுகம் செய்தார்**.

இன்று (14.10.2022) சென்னை, எழும்பூர், கோ–ஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை அங்காடியில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்கள் கோ–ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனை – 2022 தொடங்கி வைத்து, புதிய ரகங்களை அறிமுகம் செய்தார்.

கைத்தறி இரகங்களின் விற்பனையை அதிகரிக்க ஆண்டு தோறும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு தள்ளுபடி அனைத்து கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பு ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் 11 மண்டலங்களின் கீழ் உள்ள 150 விற்பனை நிலையங்களின் மூலமாக தீபாவளி விற்பனை நடைபெற்று வருகிறது.

இந்த தீபவாளி விற்பனைக்காக தேசிய வடிவமைப்பு நிறுவனம் (National Institute of Design) மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில் நுட்ப நிறுவனத்தின் (National Institute of Fashion Technology) தேர்ச்சி பெற்ற வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட புதிய 100 வடிவமைப்புகளில் வடிவமைப்பாளர்களின் தொகுப்பு (Designers Collection), பாரம்பரிய இரகங்களின் தொகுப்பு (Heritage Collection), தமிழ்நாடு மற்றும் ஒன்றிய அரசின் விருதுபெற்ற இரகங்களின் தொகுப்பு (Award Winning Collection), தனித்தன்மை பெற்ற வடிவமைப்புகளின் தொகுப்பு (Designer Collection) மற்றும் தஞ்சை மாவட்டத்தில் திருபுவனம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளர்களால் சோழர் கால சின்னங்களை கொண்டு நெய்யப்பட்ட பட்டு சேலைகள் "சோழா தொகுப்பு" (Chola Collection) என்ற பிரிவின் கீழும் புதிய இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு இந்த தீபாவளி விற்பனைக்கு வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்த தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கோ–ஆப்டெக்ஸ் வணிக வளாகத்தில் புதியதாக நவீனமயமாக்கப்பட்ட ஹோம்டெக்ஸ் விற்பனை நிலையம் (Home Tex) மற்றும் கோ–

ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் விற்பனை நிலையங்களை (Co–optex International) மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த விற்பனை நிலையத்தில் தமிழக தோடர் பழங்குடியினர் தயாரித்த துணிகளை "டிரைப்ஸ் தமிழ்நாடு" (Tribes Tamil Nadu) என்ற பெயரில் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் டைம்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து நடத்திய புதிய இரகங்களான வடிவமைப்பாளர்கள் தொகுப்பு, பாரம்பரிய இரகங்களின் தொகுப்பு, தனித்தன்மை பெற்ற வடிவமைப்புகளின் தொகுப்பு மற்றும் அரசின் விருது பெற்ற இரகங்களின் தொகுப்பு இரகங்களின் ஆடை அலங்கார அணி வகுப்பு நிகழ்ச்சி கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வணிக வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சென்னை மாநகர துணை மேயர், திரு. எம். மகேஷ் குமார் அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு இந்த விழாவினை சிறப்பித்தனர். நிறைவாக கைத்தறி ஆணையர் / கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு.த.பொ.ராஜேஷ், இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவு பெற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in